ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2008/31 - 2017 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2017.03.03

*2008/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின், 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2017, பெப்புருவரி 27.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆள் எவரும் ஏதேனும் ஈட்டி பொருத்தப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்தல் அல்லது உடைமையில் வைத்திருத்தல் அல்லது மீன்பிடி வள்ளத்தில் வைத்திருத்தல் ஆகாது.

3. ஆள் எவரும் இலங்கை நீர்ப்பரப்புகளினுள் ஈட்டி பொருத்தப்பட்ட துப்பாக்கிகள் அல்லது கையால் எந்திப் பிடிக்கும் ஈட்டிகளைப் பயன்படுத்தி ஏதேனும் மீன்பிடித் தொழிற்பாட்டில் ஈடுபடுதல் ஆகாது.

4. இவ்வொழுங்குவிதிகளில் -

"ஈட்டி பொருத்தப்பட்ட துப்பாக்கி" என்பது, கூரானமுனை கொண்ட முள்ளினால் சுடுவதன் மூலம் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு துப்பாக்கி எனப் பொருள்படும் ;

"இலங்கை நீர்ப்பரப்புகள்" 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*3- 835*